# மொன்றியால் துர்கை அம்மன் பொன்னூஞ்சல்

பொன்னூஞ்சல் ஆடினாளே துர்கை அம்மன்
பொன்னூஞ்சல் ஆடினாளே 1
கன்னூஞ்சல் ஆடினாளே சலங்கை ஒலிக்கும்
பொன்னூஞ்சல் ஆடினாளே 2
அமைதி வடிவமான இனிய கனடா நாட்டில்
மொன்றியால் நகரினிலே அரசாட்சி செய்து கொண்டு (பொன்) 3
திருவும் வாணியும் போற்ற தேவ மகளிர் ஆட
தமிழும் சைவமும் வளர்க்கும் அன்பான அடியார் தொழ (பொன்) 4
முத்தமிழ் எழுதியோனும் குறைவின்றருள் பாலிக்க
முத்தமிழ் வடிவோனும் அழகாய் கொலுவீற்றிருக்க (பொன்) 5
குறமகள் மணமகள் அன்பாய் சேவை புரிய
ஆறுமுகன் துதிக்க கருணை மழை பொழிந்து (பொன்) 6
பஞ்சமுகன் துதிக்க சிவகாமியோடு ஈசன்
ஆனந்த நடமாட நால்வரும் இனிதாய் துதிக்க (பொன்) 7
நிர்மால்யம் தன்னை ஏற்று அபிடேக தீர்த்தம் பெருகும்
கோமுகம் காவல் காக்கும் சண்டேசி போற்றி ஏத்த (பொன்) 8
இராமதூதன் வணங்க ஒன்பது கோளும் துதிக்க
சனீசன் சிறப்பாய் விளங்க பத்தரை என்றும் காத்து (பொன்) 9
தனமழையும் பொழியும் வைரவன் காவல் காக்க
பட்டொளி வீசி பறக்கும் கொடிமரம் புகழைப் பரப்ப (பொன்) 10
சகல செல்வமும் தந்து பதினாறு பேறும் பொழிந்து
மக்களை என்றும் காக்கும் சிம்மாசனேசுவரி (பொன்) 11

சிம்மவாகனம் ஏறி துவாரபாலியர் போற்ற

உற்சவ பெருநாளில் இரதமேறி எம்மைக் காத்து (பொன்) 12

செயின்ட் லாரன் நதியலைக்க பூர்ணாம்பா வணங்கி போற்ற

மொன்றியால் நகரைக் காக்கும் எல்லைக் காளியாக (பொன்) 13

முத்தும் கோமேதகமும் வைரம் நீலம் பவழம்

மாணிக்கம் வைடூரியம் பதுமராகமும் இழைத்த (பொன்) 14

தாமரை நீலோத்பலமும் பவழமல்லியும் சேர்த்து

செண்பகம் ரோசாபூவும் தாழம்பூ பந்தலில் (பொன்) 15

பல்வகை நிவேதனமும் தாம்பூலம் சூடமேற்றி

பதினாறு பூஜையேற்கும் பதினாறு கலையரசி (பொன்) 16

மறையும் வீணையும் ஒலிக்க மத்தளவாத்தியம் முழங்க

சப்தசுவரமும் போற்ற திக்கெட்டும் புகழைப் பரப்பி (பொன்) 17

உள்ளம் உருகி துதித்து கண்ணீர் சொரிந்து பாடி

நாத்தழும்பேற போற்றும் அன்பரை என்றும் காத்து (பொன்) 18

மக்கட்செல்வமும் தந்து வறுமைப்பிணியைப் போக்கி

நல்வகை சிந்தனை தந்து தீர்க்கமாய் வாழ வைத்து (பொன்) 19

உள்ளத்தில் அமைதியும் தந்து ரோகமெல்லாமும் தீர்த்து

பேரும் புகழும் தந்து கூடாநட்பும் களைந்து (பொன்) 20

பிறவாமையும் அளித்து போகம் யாவும் பொழிந்து

என்றென்றும் நம்மைக் காக்கும் உறுதியும் அழகாய் பூண்டு (பொன்) 21

முனைவர் ரா. சரஸ்வதி சாய்நாத்

28/06/2022